| வினாத்தொகுப்பு எண் : |
| --- |
| |

# CTNGS/2024

பதிவு எண்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

**2024**

**தாள் – I**

## தமிழ்மொழித் தகுதித்தேர்வு (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு – (பட்டப்படிப்புத் தரம்)

## இந்த வினாப்புத்தகம்

பகுதி–அ (தமிழ்மொழித் தகுதித் தேர்வு பத்தாம் வகுப்பு தரம்) மற்றும்
பகுதி–ஆ (பொது அறிவு–பட்டப்படிப்புத் தரம்) வினை உள்ளடக்கியது

**கால அளவு : மூன்று மணி நேரம்]** **[மொத்த மதிப்பெண்கள் : 300**

**வினாக்களுக்கு விடையளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்**

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 200 வினாக்களைக் கொண்டுள்ளது. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது.
3. விடைகளை குறிப்பதற்கு OMR விடைத்தாள் ஒன்று அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட, அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
4. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. இவ்வினாத்தொகுப்பு எண்ணை OMR விடைத்தாளில் குறிப்பதற்கு முன்பும் மற்றும் விடையளிக்கத் தொடங்கும் முன்பும், இவ்வினாத்தொகுப்பில் அனைத்து வினாக்களும் வரிசையாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாட்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். <u>வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினாத்தொகுப்பினை அட்டியம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத்தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.</u>
6. உங்களுடைய பதிவு எண்ணினை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதனையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) மற்றும் (E) என ஐந்து பதில்களை (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், அவற்றுள் மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்ப வேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையினை அளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவிதக் குறிப்புகளையும் எழுதக்கூடாது. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள "Space for Rough Work" பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.
9. வினா வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ), ஆங்கில வடிவே இறுதியானது.
10. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது.
11. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டும். இவ்வினாத்தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.</u>
12. <u>விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல்</u>
    1) வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் அதற்குரிய இடத்தில் சரியாக எழுதி அதற்குரிய வட்டங்களை நிரப்ப வேண்டும். நீங்கள் எந்த வட்டங்களை நிரப்பியுள்ளீர்களோ அதுவே இறுதியானதாகும். வினாத்தொகுப்பு எண் சரியாக எழுதப்பட்டிருந்து, அதற்குரிய வட்டங்கள் நிரப்பாமல் விடப்பட்டிருந்தாலோ அல்லது கீழ்கண்டவாறு நிரப்பப்பட்டிருந்தாலோ விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
        - தவறாக நிரப்பப்பட்டிருந்தால்
        - முறையற்று நிரப்பப்பட்டிருந்தால்
        - ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்பட்டிருந்தால்
        - வழங்கப்பட்ட வினாத்தாள் வரிசையின் வரம்பிற்கு உட்படாத வினாத்தாள் வரிசை எண் நிரப்பப்பட்டிருந்தால்
        - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தால்
        - உங்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தொகுப்பில் அச்சிடப்படாத வேறு எண்களை வினாத்தொகுப்பிற்கான வட்டங்களில் நிரப்பப்பட்டிருந்தால்
    2) கருமைநிற மை கொண்ட பந்துமுனைப் பேனா (Black Ink Ball Point Pen) தவிர வேறு பேனா உபயோகப்படுத்தி OMR விடைத்தாள் நிரப்பப்பட்டிருப்பின் அவ்விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
13. <u>மதிப்பெண்கள் குறைக்கப்படுதல்</u>
    - வினாத்தொகுப்பு எண் எழுதுவதற்கு வழங்கப்பட்ட கட்டங்களில் வினாத்தொகுப்பு எண் எழுதப்படாமலோ அல்லது பகுதியளவு எழுதப்பட்டிருந்தாலோ விண்ணப்பதாரர் பெற்ற மொத்த மதிப்பெண்களிலிருந்து ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்.
14. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையத்தின் விருப்புரிமையின் அடிப்படையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

**ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET**

SEAL

SPACE FOR ROUGH WORK

# பகுதி-அ - தமிழ்மொழித் தகுதித்தேர்வு
## (பத்தாம் வகுப்பு தரம்)

## Part-A - Tamil Eligibility Test (SSLC Standard)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள்: 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை கண்டறிதல்.

| | | | |
|---|---|---|---|
| (a) | பொக்கிஷம் | 1. | அழகு |
| (b) | சாஸ்தி | 2. | செல்வம் |
| (c) | விஸ்தாரம் | 3. | மிகுதி |
| (d) | சிங்காரம் | 4. | பெரும் பரப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

2. விடை வகைகள் : 'கடைக்குப் போவாயா'? என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல் எவ்வகை விடை?

(A) சுட்டு விடை
(B) மறை விடை
(C) நேர் விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

3. விடை வகையைத் தேர்ந்தெழுது.

வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல்

(A) நேர் விடை
(B) மறை விடை
(C) ஏவல் விடை
(D) இனமொழி விடை
(E) விடை தெரியவில்லை

4. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

Journalism

(A) அறிவியல்
(B) கலையியல்
(C) இதழியல்
(D) தொல்லியல்
(E) விடை தெரியவில்லை

5. பொருத்தமானதைத் தேர்ந்தெடு

Media

(A) ஊடகம்
(B) வானொலி
(C) தொலைக்காட்சி
(D) இணையம்
(E) விடை தெரியவில்லை

6. உவமைத் தொடர்கள் உணர்த்தும் பொருள்களைப் பொருத்துக

(a) குன்றிலிட்ட விளக்குபோல — 1. கடமை தவறுதல்
(b) வேலியே பயிரை மேய்ந்தது போல — 2. அறியாமை
(c) உடலும் உயிரும் போல — 3. பரவிய புகழ்
(d) கிணற்றுத் தவளை போல — 4. மனமொன்றிய துணை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

7. எவ்வகை வாக்கியம் எனக்கண்டெழுதுக

தன் வினைத்தொடரைக் கண்டறிக.

(A) அகமது நேற்று வந்தான்

(B) அப்பா நேற்று வருவித்தார்

(C) பூக்களைப் பறிக்காதீர்

(D) எவ்வளவு உயரமான மரம்

(E) விடை தெரியவில்லை

8. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்

(A) மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது

(B) பறவை இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது

(C) உலகில் மனிதன் பறவை இல்லாத வாழ முடியாது

(D) வாழ முடியாது மனிதன் பறவை இல்லாத உலகில்

(E) விடை தெரியவில்லை

9. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக.

(A) திளைக்காத தமிழன் உண்டா குறளின்பத்தில்?

(B) குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

(C) தமிழன் உண்டா குறளின்பத்தில் திலைக்காத?

(D) உண்டா தமிழன் திளைக்காத குறளின்பத்தில்?

(E) விடை தெரியவில்லை

10. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

(A) அழகு, ஆற்றல், அன்பு, ஆக்கம், அலகு

(B) அன்பு, அலகு, ஆற்றல், ஆக்கம், அழகு

(C) அலகு, அழகு, அன்பு, ஆக்கம், ஆற்றல்

(D) ஆக்கம், அலகு, அன்பு, அழகு, ஆற்றல்

(E) விடை தெரியவில்லை

11. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.

கீழ்க்கண்டவற்றுள் சரியான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

வேர்ச்சொல் – வினைமுற்று

(A) சென்று – சென்றார்

(B) காண் – கண்டேன்

(C) கேட் – கேட்டார்

(D) பயின் – பயின்றாள்

(E) விடை தெரியவில்லை

12. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.

சரியான இணையைத் தேர்க.

வேர்ச்சொல் – வினைமுற்று

(A) நட – நடக்கிறது

(B) உண்ட – உண்கிறேன்

(C) பேசி – பேசினாள்

(D) போன – போனான்

(E) விடை தெரியவில்லை

13. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.

கீழ்க்கண்டவற்றுள் தவறான வேர்ச்சொல் இணையைக் கண்டறிக.

வேர்ச்சொல் – வினைமுற்று

(A) வா (வரு) – வருக

(B) தீர் – தீர்த்தோன்

(C) வீழ்ந்த – வீழ்ந்தனள்

(D) உரை – உரைத்தது

(E) விடை தெரியவில்லை

14. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் அறிக.
சரியான இணையைத் தேர்க.

(A) Trust – சாரண சாரணியர்
(B) Volunteer – தன்னார்வலர்
(C) Social Worker – அறக்கட்டளை
(D) Scouts and Guides – சமூகப்பணியாளர்
(E) விடை தெரியவில்லை

15. கலைச் சொல் அறிதல் – பொருத்துக

(a) Conical Stone 1. புணர்ச்சி
(b) Missile 2. குமிழிக்கல்
(c) Combination 3. கருவூலம்
(d) Treasury 4. ஏவுகணை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

16. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் அறிக.

(A) Storm – காற்று
(B) Sea Breeze – சுழல் காற்று
(C) Tempest – சூறாவளி
(D) Land Breeze – நிலக்காற்று
(E) விடை தெரியவில்லை

17. பிறமொழிச் சொற்கள் கலந்த தொடரைக் கண்டறிக.

(A) ஏழு மின் விசிறிகள் உள்ளன
(B) அதிகாரிகள் உத்தரவு போட்டனர்
(C) தங்கக் கட்டிகள் உள்ளனவா?
(D) எழுதுகோல்கள் வாங்கி வா
(E) விடை தெரியவில்லை

18. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) கவை
(B) கொப்பு
(C) போத்து
(D) சண்டு
(E) விடை தெரியவில்லை

19. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

(A) அழிவு
(B) துன்பம்
(C) சுறுசுறுப்பு
(D) சோகம்
(E) விடை தெரியவில்லை

20. உதித்த – என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்

(A) நிறைந்த
(B) குறைந்த
(C) மறைந்த
(D) தோன்றிய
(E) விடை தெரியவில்லை

21. 'அணுகு' என்பதன் எதிர்ச்சொல்

(A) தெளிவு
(B) விலகு
(C) முறையிடல்
(D) சோர்வு
(E) விடை தெரியவில்லை

22. 'தோரண மேடை' – என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) தோரணம் + மேடை
(B) தோரண + மேடை
(C) தோரணம் + ஒடை
(D) தோரணம் + ஓடை
(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்குறிய சரியான விடையைத் தேர்ந்தெடு. (23 – 27)

உலக அறிவை நாம் பெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதாது. பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். அதற்குத் துணை புரிவன நூலகங்களே ஆகும். நூலகங்கள் மாவட்ட நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், பகுதி நேர நூலகம், தனியாள் நூலகம் எனப்பல வகைப்படும். ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகமாகும். இது தரைத்தளத்தோடு எட்டு அடுக்குகளைக் கொண்டது. இதன் பரப்பளவு மட்டும் எட்டு ஏக்கர் ஆகும்.

23. பல்வேறு துறை சார்ந்த நூல்கள் கிடைக்குமிடம்

(A) பள்ளி
(B) கல்லூரி
(C) நூலகம்
(D) வீடு
(E) விடை தெரியவில்லை

24. கிராமங்களில் இயங்கும் நூலகம்

(A) மாவட்ட நூலகம்
(B) தனியாள் நூலகம்
(C) கிளை நூலகம்
(D) ஊர்ப்புற நூலகம்
(E) விடை தெரியவில்லை

25. சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் பரப்பளவு

(A) 6 ஏக்கர்
(B) 8 ஏக்கர்
(C) 10 ஏக்கர்
(D) 12 ஏக்கர்
(E) விடை தெரியவில்லை

26. அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆசியாவின்

(A) இரண்டாவது பெரிய நூலகம்
(B) மூன்றாவது பெரிய நூலகம்
(C) நான்காவது பெரிய நூலகம்
(D) ஐந்தாவது பெரிய நூலகம்
(E) விடை தெரியவில்லை

27. நூலகம் என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

(A) நூ + அகம்
(B) நூல் + அகம்
(C) நூல + கம்
(D) நூல் + அங்கம்
(E) விடை தெரியவில்லை

28. சரியானவற்றை எழுது

கூற்று : இந்திய தேசிய இராணுவப் படைத்தலைவராக இருந்த தில்வான் "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்".

காரணம் : இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.

(A) கூற்று சரி; காரணம் சரி
(B) கூற்று சரி; காரணம் தவறு
(C) கூற்று தவறு; காரணம் சரி
(D) கூற்று தவறு; காரணம் தவறு
(E) விடை தெரியவில்லை

29. பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

(A) அவள் அன்று
(B) அவள் அல்ல
(C) அவள் அல்லள்
(D) அவள் இல்லை
(E) விடை தெரியவில்லை

30. ஒருமை பன்மை பிழை நீக்குக.

(A) மதியழகன் சூறாவளியின் போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பினார்கள்
(B) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பினான்
(C) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பின
(D) மதியழகன் சூறாவளியின்போது தரைத்தளத்தில் தங்கியதால் தப்பியது
(E) விடை தெரியவில்லை

31. சொல் – பொருள்

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) பரி – யானை

(B) கரி – குதிரை

(C) கமுகு – பாக்கு

(D) சிற்றில் – சிறு குகை

(E) விடை தெரியவில்லை

32. பிழை திருத்துதல் :

சரியான பதிலைத் தேர்ந்தெடு.

(A) ஓர் நகரம்

(B) ஓர் நாள்

(C) ஒரு அரசு

(D) ஒரு நகரம்

(E) விடை தெரியவில்லை

33. பிழை திருத்துதல் :

சரியான விடையைத் தேர்ந்தெடு.

(A) ஓர் ஊர்

(B) ஒரு ஊர்

(C) ஓர் பள்ளி

(D) ஒரு அணில்

(E) விடை தெரியவில்லை

34. சரியான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

(A) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

(B) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

(D) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்குத் இடமுண்டு

(E) விடை தெரியவில்லை

35. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

சிலப்பதிகாரம் எவ்வகை பாவில் அமைந்துள்ளது?

(A) வெண்பா
(B) அகவற்பா
(C) கலிப்பா
(D) வஞ்சிப்பா
(E) விடை தெரியவில்லை

36. வள்ளுவரும் தம்குறள் பாவடியால் வையத்தார்
உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து
- என்று வள்ளுவரைப் புகழ்ந்தவர்

(A) பாவேந்தர்
(B) பரணர்
(C) கவிமணி
(D) சுரதா
(E) விடை தெரியவில்லை

37. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

(A) சிவஞான முனிவர்
(B) மயிலை நாதர்
(C) ஆறுமுக நாவலர்
(D) இளம்பூரணர்
(E) விடை தெரியவில்லை

38. கார்காலத்தைப் பெரும் பொழுதாகக் கொண்ட நிலத்தைச் சுட்டுக.

(A) முல்லை
(B) மருதம்
(C) பாலை
(D) குறிஞ்சி
(E) விடை தெரியவில்லை

39. "கரம்பிடும்பை இல்லார்" – இத்தொடரின் பொருள் கூறுக.

(A) துன்பம் தராத நல்லார்
(B) மகிழ்ச்சி தராத மாந்தர்
(C) பகை இல்லாத நட்பினர்
(D) பொருளை பதுக்கும் மையர்
(E) விடை தெரியவில்லை

40. குறில் – நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

சரியான இணையைத் தேர்க.

கல் – கால்

(A) விருப்பு, உறுப்பு

(B) பாறை, விளைவு

(C) படி, உடல் உறுப்பு

(D) காற்று, கல்வி

(E) விடை தெரியவில்லை

41. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

விதி – வீதி

(A) சட்டம், தெரு

(B) பயணம், அகலம்

(C) கனவு, தெரு

(D) நாடக வகை, தெரு

(E) விடை தெரியவில்லை

42. குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுதுக.

நான் ———— படிப்பேன்.

நான் ———— பிடிப்பேன்.

(A) (பாடம்/படம்)

(B) (படம்/பாடம்)

(C) (பாடாம்/படம்)

(D) (படாம்/பாடம்)

(E) விடை தெரியவில்லை

43. 'வேங்கை' என்பதன் இருபொருள் தருக :

(A) கடுமை, வேகின்ற கை

(B) மரம், புலி

(C) மரம், கழுதை

(D) செடி, வெட்கம்

(E) விடை தெரியவில்லை

44. நான் மட்டுமே தண்டனை ஏற்று நரகத்தைச் சேர்வேன். ———— என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும்-இராமானுசர்

சரியான இணைப்புச் சொல் கொண்டு நிரப்புக

(A) அதனால்
(B) ஆனால்
(C) எனவே
(D) ஏனெனில்
(E) விடை தெரியவில்லை

45. நல்ல அறிவும் பண்பும் உடையவர்களுக்குப் பணம் பணியாள் ———— இவை இல்லாதவர்க்கோ மோசமான எசமான்

(A) எனவே
(B) ஆனால்
(C) ஆகையால்
(D) அதனால்
(E) விடை தெரியவில்லை

46. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு

தொகைச் சொற்கள் ———— வகைப்படும்

(A) எத்தனை
(B) எத்துணை
(C) என்ன
(D) எவ்வளவு
(E) விடை தெரியவில்லை

47. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு

காசி நகரத்தின் பெருமையைக் கூறும் நூல் ————?

(A) எது
(B) எவ்வது?
(C) ஏன்
(D) எதற்கு
(E) விடை தெரியவில்லை

48. 'இருக்கு' என்ற பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று

(A) இருக்குது
(B) கீது
(C) இருக்கிறது
(D) இழுத்துக் கட்டு
(E) விடை தெரியவில்லை

49. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

எல்லாரும் வேகமா எங்கே போறாங்க?

(A) எல்லாரும் வேகமாக எங்கு போறோம்?
(B) எல்லாரும் வேகமாக எங்கு போகிறார்கள்?
(C) எல்லாரும் வேகமாக எங்கு போவீர்கள்?
(D) எல்லாரும் வேகமாக எங்கு போய் விட்டார்கள்?
(E) விடை தெரியவில்லை

50. நிறுத்தற் குறிகள் (எது சரியானது)

தமிழ் இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது

(A) தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது.
(B) தமிழ் இயல், இசை, நாடகம், என முத்தமிழாய் வளர்ந்தது !
(C) தமிழ், 'இயல் இசை நாடகம்' என முத்தமிழாய் வளர்ந்தது ;
(D) "தமிழ் இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது"
(E) விடை தெரியவில்லை

51. நிறுத்தற் குறிகள் (எது சரியானது)

கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது

(A) கடல், முத்தினையும், அமிழ்தினையும் தருகிறது.
(B) கடல் முத்தினையும், அமிழ்தினையும் தருகிறது ;
(C) கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது.
(D) கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது !
(E) விடை தெரியவில்லை

52. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்.

காலிங்பெல்

(A) எச்சரிக்கை மணி

(B) அழைப்பு மணி

(C) கோவில் மணி

(D) தொழிற்சாலை மணி

(E) விடை தெரியவில்லை

53. பிற மொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டுபிடி.

"இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்"

(A) இதே செய்முறையை மீண்டும் செய்து விடையைக் கண்டு பிடியுங்கள்

(B) இதே செயல்முறையை மீண்டும் செய்து ஆன்சரைக் கண்டு பிடியுங்கள்

(C) இதே செயல்திட்ட முறையை மீண்டும் செய்து விடையைக் கண்டு பிடியுங்கள்

(D) இதே செயல்முறையை ரிப்பீட் செய்து விடையைக் கண்டு பிடியுங்கள்

(E) விடை தெரியவில்லை

54. விடை வகைகள் : "இது செய்வாயா?" என்று வினவியபோது, "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது

(A) ஏவல் விடை
(B) உற்றது உரைத்தல் விடை
(C) உறுவது கூறல் விடை
(D) நேர்விடை
(E) விடை தெரியவில்லை

55. நிறுத்தற்குறிகளை அறிதல்

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) கலாம் ஐயாவைக் காண்பதா? எப்படி.
(B) கலாம் ஐயாவைக் காண்பதா ! எப்படி !
(C) கலாம் ஐயாவைக் காண்பதா? எப்படி?
(D) கலாம் ஐயாவைக் காண்பதா ! எப்படி?
(E) விடை தெரியவில்லை

56. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச்சொல்).

'Morpheme'

(A) ஒலியன்
(B) ஒப்பிலக்கணம்
(C) பேரகராதி
(D) உருபன்
(E) விடை தெரியவில்லை

57. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Consulate – துணைத்தூதரகம்
(B) Patent – காப்புரிமை
(C) Document – பணம்
(D) Guild – வணிகக்குழு
(E) விடை தெரியவில்லை

58. உவமைகளால் விளக்கப் பெறும் பொருள்களுள் – பொருந்தாதது தேர்க

(A) விழலுக்கு இறைத்த நீர்போல – பயனுள்ள செயல்

(B) பசுமரத்து ஆணிபோல – எளிதில் மனதில் பதிதல்

(C) உடலும் உயிரும்போல – மனமொத்த நட்பு

(D) கிணற்றுத் தவளைபோல – உலகம் அறியாமை

(E) விடை தெரியவில்லை

59. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுக.

எலியும் பூனையும் போல

(A) இணக்கம்

(B) ஒற்றுமை

(C) பகைமை

(D) வலிமை

(E) விடை தெரியவில்லை

60. எவ்வகை வினை?

கவிதா உரை படித்தாள்

(A) செய்வினை

(B) எதிர்மறைவினை

(C) பிறவினை

(D) செயப்பாட்டுவினை

(E) விடை தெரியவில்லை

61. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

பிறவினை வாக்கியத்தை தேர்ந்தெழுதுக.

(A) குமரன் மழையில் நனைந்தான்.

(B) எவ்வளவு உயரமான மரம்!

(C) அப்துல் நேற்று வருவித்தான்

(D) பந்து உருண்டது

(E) விடை தெரியவில்லை

62. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்தல்.

கம்பளம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்

(A) செங்கடல், தேங்காய், குன்று, காக்கை, கம்பளம்

(B) தேங்காய், கம்பளம், குன்று, செங்கடல், காக்கை

(C) காக்கை, கம்பளம், குன்று, தேங்காய், செங்கடல்

(D) கம்பளம், காக்கை, குன்று, செங்கடல், தேங்காய்

(E) விடை தெரியவில்லை

63. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்துக.

(A) அன்பு, இன்பம், ஆற்றல், ஈடு, உணர்வு

(B) இன்பம், உணர்வு, ஈடு, அன்பு, ஆற்றல்

(C) ஈடு, அன்பு, ஆற்றல், இன்பம், உணர்வு

(D) அன்பு, ஆற்றல், இன்பம், ஈடு, உணர்வு

(E) விடை தெரியவில்லை

64. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக.

பாடு

(A) பாடியவள்

(B) பாடுதல்

(C) பாடுகின்றாள்

(D) பாடினாள்

(E) விடை தெரியவில்லை

65. வேர்ச்சொல்லின் தொழிற்பெயரைக் கண்டறிக.

காண்

(A) கண்டல்

(B) காண்க

(C) காணுதல்

(D) கண்டான்

(E) விடை தெரியவில்லை

66. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

அருள், பரிவு, கருணை ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) இரக்கம்
(B) அன்பு
(C) வறுமை
(D) ஈகை
(E) விடை தெரியவில்லை

67. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

ஆதவன், பகலவன், ஞாயிறு ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) மாணவன்
(B) கதிரவன்
(C) இறைவன்
(D) முதியவன்
(E) விடை தெரியவில்லை

68. ஒரு பொருள் தரும் பல சொற்கள்

வாயு, தென்றல், வளி, புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களில் கூறப்படுவது எது? தேர்ந்து எழுதுக.

(A) கதிரவன்
(B) ஆழி
(C) காற்று
(D) நிலம்
(E) விடை தெரியவில்லை

69. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

கொடு – கோடு

(A) ஈ – கேட்டல்
(B) தா – வட்டம்
(C) கொடுத்தல் – நேராக வரைதல்
(D) கூறிய – மலை
(E) விடை தெரியவில்லை

70. சந்தி பிழையற்ற வாக்கியங்களைக் கண்டறிக.

(1) வாடைக் காற்று வீசியது

(2) வாடை காற்று வீசியது

(3) வெயில் சட்டெனத் தணிந்தது

(4) வெயில் சட்டென தணிந்தது

(A) (1) மற்றும் (3) சரி
(B) (2) மற்றும் (4) சரி
(C) (1) மற்றும் (4) சரி
(D) (2) மற்றும் (3) சரி
(E) விடை தெரியவில்லை

71. மரபுப்பிழை நீக்கி எழுது.

இல்லத்தின் அருகே கூரை ————.

(A) கட்டினர்
(B) உருவாக்கினர்
(C) வேய்ந்தனர்
(D) முடைந்தனர்
(E) விடை தெரியவில்லை

72. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.

பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து

(A) பாக்கு
(B) பஞ்சு
(C) பாட்டு
(D) பத்து
(E) விடை தெரியவில்லை

73. பொருந்தாத சொல்லை கண்டறிக.

பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு

(A) எஃகு
(B) கண்டு
(C) மஞ்சு
(D) பண்பு
(E) விடை தெரியவில்லை

74. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) வான + மளந்தது

(B) வான் + அளந்தது

(C) வானம் + அளந்தது

(D) வான் + மளந்தது

(E) விடை தெரியவில்லை

75. 'கைப்பொருள்' – என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) கையில் + பொருள்

(B) கை + பொருள்

(C) கைப் + பொருள்

(D) கைப்பு + பொருள்

(E) விடை தெரியவில்லை

76. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) என் + றென்றும்

(B) என்று + என்றும்

(C) என்றும் + என்றும்

(D) என் + என்றும்

(E) விடை தெரியவில்லை

77. 'வாசல் + அலங்காரம்'– என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

(A) வாசல் அலங்காரம்

(B) வாசலங்காரம்

(C) வாசலலங்காரம்

(D) வாசலிங்காரம்

(E) விடை தெரியவில்லை

78. ஒருமை பன்மை பிழை நீக்குக.

சரியான தொடரைத் தெரிவு செய்க.

(A) அதைச் செய்தது நான் அன்று

(B) பானையை உடைத்தது கண்ணன் அல்ல

(C) பகைவர் நீவிர் அல்லர்

(D) இவை பழங்கள் அல்ல

(E) விடை தெரியவில்லை

79. சொல் – பொருள் – பொருத்துக.

(a) தெளிவு — 1. அடங்கி இருத்தல்

(b) ஓர்தல் — 2. நற்காட்சி

(c) உவசமம் — 3. அகற்றுவதற்கு

(d) போர்தற்கு — 4. நல்லறிவு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

80. சொல்லும் பொருளும் பொருத்துக.

(a) குந்த — 1. மணம்

(b) மிசை — 2. உட்கார

(c) கந்தம் — 3. கவலை

(d) விசனம் — 4. மேல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

81. எவ்வகைத் தொடர்?

பூக்களைப் பறிக்காதீர்

(A) செய்தித்தொடர்

(B) வினாத்தொடர்

(C) கட்டளைத் தொடர்

(D) உணர்ச்சித்தொடர்

(E) விடை தெரியவில்லை

82. சரியான தொடரைத் தேர்ந்தெடு.

எவ்வளவு உயரமான மரம் !

(A) கட்டளைத் தொடர்

(B) செய்தித்தொடர்

(C) வினாத்தொடர்

(D) உணர்ச்சித்தொடர்

(E) விடை தெரியவில்லை

83. சொல்லின் கூட்டப்பெயர் காண்.

பழம்

(A) பழங்கள்

(B) பழகள்

(C) பழக்கள்

(D) பழம்கள்

(E) விடை தெரியவில்லை

84. சரியான கூட்டுப் பெயரைத் தெரிவு செய்க.

ஆடு

(A) நிரை

(B) கூட்டம்

(C) மந்தை

(D) ஆடுகள்

(E) விடை தெரியவில்லை

85. பொருத்தமான நூலினைத் தெரிவு செய்க.

"அல்லில் ஆயினும் விருந்து வரின்

உவக்கும்" – என்று விருந்தோம்பலின் சிறப்பை விளக்கும் வரிகள் இடம்பெற்ற நூல்.

(A) புறநானூறு

(B) நற்றிணை

(C) சிலப்பதிகாரம்

(D) சிறுபாணாற்றுப்படை

(E) விடை தெரியவில்லை

86. கலைச்சொற்களை அறிக.

Saline Soil

(A) வறண்ட நிலம்

(B) பசுமை நிலம்

(C) களர் நிலம்

(D) பண்பட்ட நிலம்

(E) விடை தெரியவில்லை

87. கலைச்சொற்களை அறிக.

Ancient Literature

(A) நாட்டுப்புற இலக்கியம்

(B) பக்தி இலக்கியம்

(C) செவ்விலக்கியம்

(D) பண்டைய இலக்கியம்

(E) விடை தெரியவில்லை

88. கலைச்சொற்களை அறிதல்

சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

(A) Missile – கடல்மைல்

(B) Launch Vehicle – ஏவுகணை

(C) Download – பதிவிறக்கம்

(D) Nautical Mile – ஏவு ஊர்தி

(E) விடை தெரியவில்லை

89. இரு பொருள் தருக

அலை

(A) நீரலை – ஆற்றல்
(B) பகல் – சேறு
(C) கடல் அலை – அலைந்து திரிதல்
(D) திரைச்சீலை – சுத்தம் செய்
(E) விடை தெரியவில்லை

90. இரு பொருள் தருக

ஆறு

(A) காவிரி – வைகை
(B) நதி – எண்
(C) கங்கை – யமுனை
(D) ஐந்து – வழி
(E) விடை தெரியவில்லை

91. மரபு பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க

(A) சேவல் கூவும்
(B) புறா கொக்கரிக்கும்
(C) கோழி சத்தம் போடும்
(D) கோழி கரையும்
(E) விடை தெரியவில்லை

92. சரியான இணைப்புச் சொல்

காற்றே ! வா

உன்னைப் பாடாமல்

இருக்க முடியாது

———— பாட்டின் மூல ஊற்றே

நீதான் – விடுபட்ட இணைப்புச் சொல்லைத் தேர்வு செய்க.

(A) எனவே
(B) அதுபோல
(C) ஏனெனில்
(D) ஆகையால்
(E) விடை தெரியவில்லை

93. நிறுத்தற்குறிகளை அறிதல்

நிறுத்தற்குறிகள் (எது சரியானது)

(A) ஆ! யாரது சாலையோரம் படுத்துக்கிடப்பது!

(B) ஆ? யாரது சாலையோரம் படுத்துக்கிடப்பது?

(C) ஆ; யாரது, சாலையோரம் படுத்துக் கிடப்பது?

(D) ஆ, யாரது? சாலையோரம் படுத்துக் கிடப்பது!

(E) விடை தெரியவில்லை

94. ஊர்ப் பெயர்களின் மரூஉவைக் கண்டுபிடிக்க

புதுக்கோட்டை

(A) புதுயை

(B) புதுமை

(C) புதுகை

(D) புதுவை

(E) விடை தெரியவில்லை

95. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.

திருநெல்வேலி

(A) நெல்லை

(B) நெல்லூர்

(C) நெல்வாயில்

(D) நெய்வேலி

(E) விடை தெரியவில்லை

96. ஊர்ப் பெயரின் மரூஉவை எழுது.

புதுச்சேரி

(A) புதுமுகனை

(B) புதுவை

(C) புதுகை

(D) பாண்டிச்சேரி

(E) விடை தெரியவில்லை

97. பொருத்தமான காலத்தைச் சுட்டுக.

மாடுகள் இப்பொழுது புல் மேய்கின்றன

(A) இறந்த காலம்
(B) எதிர் காலம்
(C) நிகழ் காலம்
(D) கோடை காலம்
(E) விடை தெரியவில்லை

98. பொருத்தமான காலத்தை எடுத்து எழுதுக

சரியான இணையைத் தேர்ந்தெழுதுக

(A) கண்ணன் பாடுகிறான் (நிகழ்காலம்)
(B) மாணவி எழுகிறாள் (இறந்தகாலம்)
(C) வளவன் சாப்பிட்டான் (எதிர்காலம்)
(D) குமுதா கடைக்குப் போனாள் (எதிர்காலம்)
(E) விடை தெரியவில்லை

99. பொருத்தமான காலத்தை எடுத்தெழுதுக.

சரியான இணையைத் தேர்வு செய்க.

(A) கண்ணன் படித்தான் – இறந்தகாலம்
(B) பூவிழி கோலம் வரைகிறாள் – எதிர்காலம்
(C) ஊட்டமிகு உணவு உண்பார் – நிகழ்காலம்
(D) பொது அறிவு நூல்களைத் தேடிப்படிக்கின்றார் – எதிர்காலம்
(E) விடை தெரியவில்லை

100. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு

நீத்துப்பாகம் குடிக்க வா

(A) சோற்றுக் கஞ்சி குடிக்க வா
(B) சோளக் கஞ்சி குடிக்க வா
(C) உளுந்தங் கஞ்சி குடிக்க வா
(D) மேல்கஞ்சி குடிக்க வா
(E) விடை தெரியவில்லை

## பகுதி-ஆ – பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்)

## Part-B – General Studies (Degree Standard)

வினாக்கள் : 101–200 மொத்த மதிப்பெண்கள்: 150

Questions : 101–200 Total Marks : 150

---

101. A mother divides Rs. 207 into three parts such that the amount are in AP and give it to her three children. The product of the two least amounts that the children had Rs. 4623. Find the amount received by each child.

(A) 64, 69, 74
(B) 65, 69, 73
(C) 67, 69, 71
(D) 68, 69, 70
(E) Answer not known

ஒரு தாய் தன்னிடம் உள்ள ரூ. 207யை கூட்டுத்தொடர் வரிசையில் அமையும் மூன்று பாகங்களாகப் பிரித்து தனது மூன்று குழந்தைகளுக்கும் கொடுக்க விரும்பினார். அவற்றுள் இரு சிறு தொகைகளின் பெருக்கற்பலன் ரூ. 4623 ஆகும். இதில் ஒவ்வொரு குழந்தையும் பெரும் தொகையினைக் காண்க.

(A) 64, 69, 74
(B) 65, 69, 73
(C) 67, 69, 71
(D) 68, 69, 70
(E) விடை தெரியவில்லை

102. The LCM of $\frac{1}{3}, \frac{5}{6}, \frac{2}{9}, \frac{4}{27}$ is

(A) $\frac{20}{3}$
(B) $\frac{40}{81}$
(C) $\frac{10}{18}$
(D) $\frac{40}{27}$
(E) Answer not known

$\frac{1}{3}, \frac{5}{6}, \frac{2}{9}, \frac{4}{27}$ ன் மீ.பொ.ம. என்ன?

(A) $\frac{20}{3}$
(B) $\frac{40}{81}$
(C) $\frac{10}{18}$
(D) $\frac{40}{27}$
(E) விடை தெரியவில்லை

103. Find the single discount in percentage which is equivalent to two successive discounts of 25% and 20% given for an article.

(A) 30 % (B) 50 %

(C) 40 % (D) 20 %

(E) Answer not known

ஒரு பொருளின் மீது வழங்கப்படும் இரு தொடர் தள்ளுபடிகள் முறையே 25% மற்றும் 20% எனில் இதற்கு நிகரான ஒரே சமானத் தள்ளுபடிச் சதவீதத்தினைக் காண்க.

(A) 30 % (B) 50 %

(C) 40 % (D) 20 %

(E) விடை தெரியவில்லை

104. Find the next term (number) of the series.

1, 5, 29, ____.

(A) 71 (B) 259

(C) 73 (D) 257

(E) Answer not known

அடுத்த எண்ணைக் கண்டுபிடி.

1, 5, 29, ____.

(A) 71 (B) 259

(C) 73 (D) 257

(E) விடை தெரியவில்லை

105. In a certain code, we denote RED as 1, BLUE as 2, VIOLET as 3 then ORANGE is denoted as

(A) 4 (B) 6

(C) 3 (D) 5

(E) Answer not known

ஒரு வித குறியீட்டில், 'RED' 1 எனவும், 'BLUE' 2 எனவும், 'VIOLET' 3 எனவும் குறிக்கப்பட்டால், 'ORANGE' எவ்வாறு குறிக்கப்படும்?

(A) 4 (B) 6

(C) 3 (D) 5

(E) விடை தெரியவில்லை

106. 2 dice having face values 2, 2, 3, 4, 5, 6 are rolled. In how many cases the face values are relatively prime to each other?

(A) 12 (B) 16

(C) 20 (D) 24

(E) Answer not known

2, 2, 3, 4, 5, 6 முக மதிப்புகள் உடைய இரு பகடைகள் உருட்டப்படும் பொழுது, இரண்டு முக மதிப்புகளும் சார்பகா எண்களாக இருக்க வாய்ப்புகள் எத்தனை?

(A) 12 (B) 16

(C) 20 (D) 24

(E) விடை தெரியவில்லை

107. If the total surface area of a cone of slant height 25 cm is 704 $cm^2$, then find its radius.

(A) 7 cm
(B) 25 cm
(C) 32 cm
(D) –32 cm
(E) Answer not known

704 ச.செ.மீ மொத்த புறப்பரப்பு கொண்ட ஒரு கூம்பின் சாயுயரம் 25 செ.மீ எனில் அதன் ஆரம் என்ன?

(A) 7 செ.மீ
(B) 25 செ.மீ
(C) 32 செ.மீ
(D) –32 செ.மீ
(E) விடை தெரியவில்லை

108. Two identical cubes of side 5 cm are joined end to end. Find the Total Surface Area of the new resulting cuboid.

(A) 225 $cm^2$
(B) 150 $cm^2$
(C) 250 $cm^2$
(D) 200 $cm^2$
(E) Answer not known

5 செ.மீ பக்க அளவுள்ள ஒரே மாதிரியான இரண்டு கனச்சதுரங்கள் ஒன்றுடன் ஒன்று பக்கவாட்டில் இணைக்கப்படும்போது கிடைக்கும் புதிய கனச்செவ்வகத்தின் மொத்தப்பரப்பைக் காண்க.

(A) 225 செ.மீ$^2$
(B) 150 செ.மீ$^2$
(C) 250 செ.மீ$^2$
(D) 200 செ.மீ$^2$
(E) விடை தெரியவில்லை

109. If the numerator of a fraction is increased by 50% and the denominator is decreased by 20% then it becomes $\frac{3}{5}$, find the original fraction.

(A) $\frac{3}{4}$
(B) $\frac{8}{25}$
(C) $\frac{24}{25}$
(D) $\frac{3}{8}$
(E) Answer not known

ஒரு பின்னத்தின் தொகுதியை 50% அதிகரித்தும் பகுதியை 20% குறைத்தால் அந்த பின்னமானது $\frac{3}{5}$ ஆக மாறுகிறது எனில் அந்த பின்னத்தைக் காண்க.

(A) $\frac{3}{4}$
(B) $\frac{8}{25}$
(C) $\frac{24}{25}$
(D) $\frac{3}{8}$
(E) விடை தெரியவில்லை

110. Which one pair of the following such that product of the pair is equal to LCM?

(A) 32, 162
(B) 32, 81
(C) 40, 405
(D) 111, 39
(E) Answer not known

பின்வருவனவற்றுள் எந்த இணை எண்களானது அவற்றின் பெருக்குத் தொகையை மீச்சிறு பொது மடங்காக இருக்குமாறு அமைகிறது?

(A) 32, 162
(B) 32, 81
(C) 40, 405
(D) 111, 39
(E) விடை தெரியவில்லை

111. Sum of the incomes of A and B is greater than the sum of the incomes of C and D. Sum of the incomes of A and C equals the sum of the incomes of B and D. A gets half the sum of incomes of B and D. Who gets the highest income?

(A) A
(B) B
(C) C
(D) D
(E) Answer not known

A மற்றும் B என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகையானது C மற்றும் D என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகையை விட அதிகம். A மற்றும் C என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகை B மற்றும் D என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகைக்குச் சமம். A என்பவர் B மற்றும் D என்பவர்களின் ஊதியங்களின் கூடுதலில் பாதியைப் பெறுகிறார். அதிக ஊதியம் பெறுபவர் யார்?

(A) A
(B) B
(C) C
(D) D
(E) விடை தெரியவில்லை

112. Find the ratio of the areas of the incircle and circumcircle of a square.

(A) 2:1
(B) 4:1
(C) 1:2
(D) 1:4
(E) Answer not known

ஒரு சதுரத்தின் உள்வட்டம் மற்றும் வெளிவட்டம் ஆகியவற்றின் பரப்பளவுகளின் விகிதத்தைக் காண்க.

(A) 2:1
(B) 4:1
(C) 1:2
(D) 1:4
(E) விடை தெரியவில்லை

113. Which of the following promote(s) social justice?

(A) Economic opportunity

(B) Workplace opportunity

(C) Educational opportunity

(D) All the above

(E) Answer not known

பின்வருவனவற்றில் எது/எவை சமூக நீதியை மேம்படுத்துகிறது?

(A) பொருளாதார சமவாய்ப்பு

(B) வேலைப் பகிர்வில் சமவாய்ப்பு

(C) கல்வியில் சமவாய்ப்பு

(D) இவை அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

114. The Tamilnadu e-Governance Agency (TNeGA) was created during the year

(A) 2007 (B) 2008

(C) 2009 (D) 2010

(E) Answer not known

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

(A) 2007 (B) 2008

(C) 2009 (D) 2010

(E) விடை தெரியவில்லை

115. Which of the following is correctly paired?

| | | | |
|---|---|---|---|
| (a) | UNICEF | 1. | Assistance for multi drug therapy |
| (b) | SIDA | 2. | Assistance for universal immunization programme |
| (c) | ODA | 3. | National programme for council of blindness |
| (d) | DANIDA | 4. | Programme for family welfare |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known

பின்வருவனவற்றுள் எது சரியாக இணைக்கப்பட்டுள்ளது?

| | | | |
|---|---|---|---|
| (a) | UNICEF | 1. | பல்வகை மருத்துவ சிகிச்சைக்கு உதவி |
| (b) | SIDA | 2. | உலகளாவிய நோய் தடுப்பு திட்டத்திற்கான உதவி |
| (c) | ODA | 3. | குருட்டு தன்மை கவுன்சிலுக்கான தேசிய திட்டம் |
| (d) | DANIDA | 4. | குடும்ப நல திட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

116. Assertion and Reason type :

Assertion (A) : The Government of Tamilnadu as a welfare state supplies food - grains and essential commodities at affordable price to the general public under PDS.

Reason (R) : In order to alleviate poverty the essential commodities are supplied in the Indian context in Indian Food economy.

(A) (A) is true but (R) is false

(B) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)

(C) (A) is false and (R) is true

(D) Both (A) and (R) are true but (R) is not the correct explanation of (A)

(E) Answer not known

கூற்று மற்றும் காரணம் வகை :

கூற்று (A) : பொது வழங்கல் முறையின் கீழ் தமிழ்நாடு அரசு அதன் ஒரு நலத்திட்டத்தின் அடிப்படையில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களை மலிவு விலையில் வழங்குகிறது.

காரணம் (R) : இந்திய உணவு பொருளாதார கொள்கையின் அடிப்படையில், வறுமையை ஒழிக்கும் நோக்கோடு அத்தியாவசிய பண்டங்கள் வழங்கப்படுகிறது.

(A) (A) சரியானது ஆனால் (R) தவறானது

(B) (A) மற்றும் (R) இவை இரண்டும் சரியானது மேலும் (A) கூற்றுக்கான விளக்கம் (R) என்பது சரியானது

(C) (A) கூற்று தவறானது மற்றும் (R) தவறானது

(D) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது, ஆனால் (A) கூற்றுக்கான விளக்கம் (R) ஆகாது

(E) விடை தெரியவில்லை

117. ———————— is a reshaping or reforming of culturally accepted laws and norms in light of new cultural paradigms that occur over time.

(A) Social Work

(B) Social Action

(C) Social Reforms

(D) Social Science

(E) Answer not known

———————— என்பது காலப்போக்கில் ஏற்படும் புதிய பண்பாட்டு முன்னுதாரணங்களின் வெளிச்சத்தில், பண்பாட்டின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்களையும், விதிமுறைகளையும் மறுவடிவமைத்தல் அல்லது சீர்திருத்தம் செய்தல் என்பதாகும்.

(A) சமூக பணி

(B) சமூக நடவடிக்கை

(C) சமூக சீர்திருத்தங்கள்

(D) சமூக அறிவியல்

(E) விடை தெரியவில்லை

118. Which among the following was a Resolution passed by an emergency meeting of the Tamilnadu Legislative Assembly on 23 January 1968?

(A) Alcohol Exclusion Policy
(B) Policy of State Autonomy
(C) Bilingual Policy
(D) Collective Economic Policy
(E) Answer not known

கீழ்கண்டவற்றில் 1968 ஜனவரி 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எது?

(A) மதுவிலக்குக் கொள்கை
(B) மாநில சுயாட்சிக் கொள்கை
(C) இருமொழிக் கொள்கை
(D) கூட்டுப் பொருளாதாரக் கொள்கை
(E) விடை தெரியவில்லை

119. Among the following which was considered as the achievements of Justice Party.

(i) Women are allowed to contest in the election
(ii) In 1925, Madras Hindu Religious Endowment Act was passed
(iii) Farmers Loan Relief Act

(A) (i) only
(B) (i) and (ii) only
(C) (i) and (iii) only
(D) (ii) and (iii) only
(E) Answer not known

நீதிக்கட்சி அரசாங்கத்தின் சட்டச் சாதனைகள்.

(i) தேர்தலில் போட்டியிட பெண்கள் அனுமதிக்கப்பட்டனர்
(ii) 1925ஆம் ஆண்டு மெட்ராஸ் இந்து சமய அறக்கட்டளை சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது
(iii) விவசாயிகள் கடன் தள்ளுபடி சட்டம்

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (i) மற்றும் (iii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்
(E) விடை தெரியவில்லை

120. Arrange the route of Salt March led by Rajaji :

(a) Trichy

(b) Thiruthuraipoondi

(c) Kumbakonam

(d) Thanjavur

(A) (a), (c), (d), (b)
(B) (a), (c), (b), (d)
(C) (a), (d), (c), (b)
(D) (a), (b), (c), (d)
(E) Answer not known

இராஜாஜியால் வழிநடத்தப்பட்ட உப்பு சத்தியாகிரக வழியை வரிசைப்படுத்துக.

(a) திருச்சி

(b) திருத்திரைப்பூண்டி

(c) கும்பகோணம்

(d) தஞ்சாவூர்

(A) (a), (c), (d), (b)
(B) (a), (c), (b), (d)
(C) (a), (d), (c), (b)
(D) (a), (b), (c), (d)
(E) விடை தெரியவில்லை

121. 'Mother also hates her son's impropriety' - Which improper behaviour has been mentioned by Valluvar?

(A) Liquor
(B) Murder
(C) Pity
(D) Theft
(E) Answer not known

'தாயும் தன் மகனை வெறுக்கும் தீய ஒழுக்கம்' என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

(A) கள் உண்ணுதல்
(B) கொலை செய்தல்
(C) பாவம் செய்தல்
(D) திருட்டுக் குற்றம்
(E) விடை தெரியவில்லை

122. Utamaiyul Inmai Virundhompal Ompaa

Matamai Matavaarkan Untu. – Bring out the correct meaning of the kural.

(A) Poverty amidst wealth is the nature of hospitality among women

(B) Poverty amidst wealth is the property of the senseless as they are inhospitable

(C) Inhospitality practised by women will live a life of poverty even with their wealth

(D) Women have certain faults, they entertain hospitality even when they are in poverty

(E) Answer not known

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா

மடமை மடவார்கண் உண்டு – இதன் பொருள் கூறுக.

(A) செல்வத்தில் வறுமை என்பது விருந்தோம்பல். இது பெண்களிடன் உண்டு

(B) செல்வத்தில் வறுமை என்பது விருந்தோம்பலைச் செய்யாத பேதைமை. இது பேதையரின் ஒழுக்கமாகும்

(C) விருந்தோம்பலை நீக்கும் பெண்கள் செல்வ வாழ்விலும் வறுமையை அடைவர்

(D) பெண்களிடம் சில கெட்ட குணங்கள் உள்ளன. வறுமை என்றாலும் விருந்தினரை வரவேற்பார்கள்

(E) விடை தெரியவில்லை

123. Mention the name of the book, where the following lines depicts the uncertainty of life.

"Thiraiedum manalinum palare uraisela
malarthalai ulagam aandu kalinthorae"

(A) Madurai Kanji
(B) Nedunalvaadai
(C) Kurinchi pattu
(D) Mullai pattu
(E) Answer not known

"திரையிடும் மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே",
என்ற வாழ்க்கையின் நிலையாமைத் தன்மையை எடுத்துரைக்கும் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

(A) மதுரைக் காஞ்சி
(B) நெடுநல்வாடை
(C) குறிஞ்சிப்பாட்டு
(D) முல்லைப்பாட்டு
(E) விடை தெரியவில்லை

124. Which among the following plates are not associated with Simma Vishnu?

(A) Vellorepalayam plates
(B) Kasakkudi plates
(C) Kanchanur plates
(D) Chinnamanur plates
(E) Answer not known

கீழ்கண்டவற்றுள் சிம்ம விஷ்ணுவிற்கு தொடர்பில்லாத பட்டயத்தை தேர்ந்தெடுக்கவும்.

(A) வேலூர்பாளையம் பட்டயம்
(B) காசக்குடி பட்டயம்
(C) கஞ்சனூர்ப் பட்டயம்
(D) சின்னமனூர் பட்டயம்
(E) விடை தெரியவில்லை

125. Which among the following was mainly responsible for communalism in India?

(A) Bengal partition

(B) Non – Cooperation

(C) The Indian National Congress

(D) Divide and Rule

(E) Answer not known

இந்தியாவில் வகுப்புவாதத்திற்கு பின்வருவனவற்றுள் எது முதன்மைக் காரணமாக அமைந்தது ?

(A) வங்கப் பிரிவினை

(B) ஒத்துழையாமை

(C) இந்திய தேசிய காங்கிரஸ்

(D) பிரித்தாளும் கொள்கை

(E) விடை தெரியவில்லை

126. A United India even if it was smaller in size was better than a disorganized troubled and weak bigger India –

Who said this?

(A) Jawahar Lal Nehru

(B) C. Raja Gopalachari

(C) Mahatma Gandhi

(D) Sardar Vallabhai Patel

(E) Answer not known

ஒன்றுபட்ட இந்தியாவானது சிறியதாக இருந்தாலும் ஒழுங்கற்ற, குழப்பமான மற்றும் பலவீனமான பெரிய இந்தியாவை விட சிறந்ததாகும் –

இதைச் சொன்னவர் யார்?

(A) ஜவகர்லால் நேரு

(B) சி. இராஜகோபாலச்சாரி

(C) மகாத்மா காந்தி

(D) சர்தார் வல்லபாய் பட்டேல்

(E) விடை தெரியவில்லை

127. Which of the following statements are true about Indian National Congress?

(i) W.C. Banerjee was the first President of Indian National Congress held at Bombay

(ii) Dadhabhai Naoroji was the second President of Indian National Congress held at Calcutta

(iii) Gopala Krishna Gokhale was the third President of Indian National Congress held at Lahore

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

பின்வருவனவற்றுள் இந்திய தேசிய் காங்கிரஸ் பற்றிய சரியானக் கூற்றுகள் எது?

(i) பம்பாயில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் முதல் மாநாட்டின் தலைவர் W.C. பானர்ஜி

(ii) கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டாவது மாநாட்டின் தலைவர் தாதாபாய் நவ்ரோஜி

(iii) லாகூரில் நடைபெற்ற இந்திய் தேசிய காங்கிரஸ் மூன்றாவது மாநாட்டின் தலைவர் கோபால கிருஷ்ண கோகலே

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

128. Arrange the following events in chronological order.

(1) Tendulkar Committee

(2) V.M. Dandekar and N. Rath Committee

(3) Lakdawala Committee

(4) C. Rangarajan Committee

(A) (1), (2), (4), (3)

(B) (4), (3), (2), (1)

(C) (2), (3), (1), (4)

(D) (3), (1), (4), (2)

(E) Answer not known

பின்வரும் நிகழ்வுகளைக் காலவரிசைப்படி ஒழுங்கமைக்கவும்.

(1) டெண்டுல்கர் குழு

(2) V.M. தண்டேகர் மற்றும் N. ரத் குழு

(3) லக்டவாலா குழு

(4) C. ரங்கராஜன் குழு

(A) (1), (2), (4), (3)

(B) (4), (3), (2), (1)

(C) (2), (3), (1), (4)

(D) (3), (1), (4), (2)

(E) விடை தெரியவில்லை

129. The following statements are true about National Population policy 2000?

1. The immediate objective of the policy was to meet the needs of health infrastructure and health personnel

2. The medium-term objective was to lower down fertility rate to the replacement level by 2010

3. The long-term objective is to achieve stable population by 2050

(A) 1 and 3 are true

(B) 2 and 3 are true

(C) 1 and 2 are true

(D) 1, 2 and 3 are true

(E) Answer not known

தேசிய மக்கள் தொகைக் கொள்கை 2000 இல் பின்வருவனவற்றில் எது உண்மை?

1. கொள்கையின் உடனடி நோக்கம் என்பது சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் சுகாதார பணியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாகும்

2. நடுத்தர கால நோக்கம் – 2010 ஆம் ஆண்டிற்குள் கருவுறுதல் விகிதத்தைக் மாற்றுநிலையளவு குறைப்பது

3. நீண்ட கால நோக்கம் என்பது 2050 க்குள் நிலையான மக்கள் தொகையை அடைவது

(A) 1 மற்றும் 3 சரியானவை

(B) 2 மற்றும் 3 சரியானவை

(C) 1 மற்றும் 2 சரியானவை

(D) 1, 2 மற்றும் 3 சரியானவை

(E) விடை தெரியவில்லை

130. Who among the following is not a part of Governing council of NITI Aayog?

(1) Chief Ministers of all States

(2) Governors of all States

(3) Lt. Governors of Union Territories (except Delhi and Puducherry)

(A) (2) only

(B) (3) only

(C) (1) and (2)

(D) (2) and (3)

(E) Answer not known

கீழ்கண்டவர்களில் யார் NITI ஆயோக்கின் ஆளும் குழுவின் ஒரு பகுதியாக இல்லை?

(1) அனைத்து மாநில முதல்வர்கள்

(2) அனைத்து மாநிலங்களின் ஆளுநர்கள்

(3) யூனியன் பிரதேசங்களின் லெப்டினைட் ஆளுநர்கள் (டெல்லி மற்றும் புதுச்சேரி நீங்கலாக)

(A) (2) மட்டும்

(B) (3) மட்டும்

(C) (1) மற்றும் (2)

(D) (2) மற்றும் (3)

(E) விடை தெரியவில்லை

131. Match the following :

| | Commission | | Chairman |
|---|---|---|---|
| (a) | $14^{th}$ Finance Commission | 1. | Sri K.C. Pant |
| (b) | $13^{th}$ Finance Commission | 2. | Dr. Vijay Kelkar |
| (c) | $12^{th}$ Finance Commission | 3. | Dr. C. Rangarajan |
| (d) | $10^{th}$ Finance Commission | 4. | Dr. Y.V. Reddy |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) Answer not known

பொருத்துக :

| | ஆணையம் | | தலைவர் |
|---|---|---|---|
| (a) | 14வது நிதி ஆணையம் | 1. | ஸ்ரீ கே.சி. பாண்ட் |
| (b) | 13வது நிதி ஆணையம் | 2. | டாக்டர். விஜய் கெல்கர் |
| (c) | 12வது நிதி ஆணையம் | 3. | டாக்டர். சி. ரங்கராஜன் |
| (d) | 10வது நிதி ஆணையம் | 4. | டாக்டர் ஒய்.வி. ரெட்டி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

132. Choose the incorrect pair who held office of the President and Vice–President side by side :

| | President | | Vice–President |
|---|---|---|---|
| (1) | K.R. Narayanan | – | Krishnakant |
| (2) | S. Radhakrishnan | – | Zakir Husain |
| (3) | R. Venkatraman | – | Shankar Dayal Sharma |
| (4) | Giani Zail Singh | – | K.R. Narayanan |

(A) (3) is incorrect

(B) (4) is incorrect

(C) (1) and (2) are incorrect

(D) (2) is incorrect

(E) Answer not known

இந்திய குடியரசு தலைவராக மற்றும் துணைக் குடியரசு தலைவராக ஒரே நேரத்தில் இருந்த இணையில் தவறான இணைகளை கண்டறிக :

| | குடியரசு தலைவர் | | துணை குடியரசு தலைவர் |
|---|---|---|---|
| (1) | K.R. நாராயணன் | – | கிருஷ்ணகாந்த் |
| (2) | S. ராதாகிருஷ்ணன் | – | ஜாகிர் உசேன் |
| (3) | R. வெங்கட்ராமன் | – | சங்கர் தயாள் சர்மா |
| (4) | கியானி ஜெயில் சிங் | – | K.R. நாராயணன் |

(A) (3) தவறான இணை

(B) (4) தவறான இணை

(C) (1) மற்றும் (2) தவறான இணை

(D) (2) தவறான இணை

(E) விடை தெரியவில்லை

133. Find out the incorrectly matched pair with respect to election machinery.

(1) ECI – Election Commission of India

(2) CEO – Chief Electoral Officer

(3) DEO – Development Election Officer

(4) ERO – Election Registration (Officer Election)

(A) (1) and (2) are incorrect

(B) (1) and (3) are incorrect

(C) (3) and (4) are incorrect

(D) (2) and (4) are incorrect

(E) Answer not known

தேர்தல் இயந்திரங்களைப் பொறுத்தமட்டில் சரியாக பொருந்தாத இணையை கண்டறிக.

(1) ECI – இந்திய தேர்தல் ஆணையம்

